DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : LW7/PW8

| Name | மருத்துவர் கார்த்திகேயன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | பாலகிருஷ்ணன் | Village | |
| Age | 41 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **03.12.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய காவலர் திரு.கா.பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது கடலூர் அரசு மருத்துவமனையில் மூத்த மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது, கடந்த 09.02.2021 அன்று மேற்படி மருத்துவமனையில், நான் அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது, பண்ருட்டி அரசு மருத்துவமனை வெளிப்புறகாவல் நிலையத்தில் அலுவல் புரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன், த.பெ.சீனிவாசன் என்பவர் தன்னிச்சையாக சுமார் 03.05 am மணியளவில், என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவரை நான் விசாரித்தபோது, அவர் தன்னை, தனக்கு தெரிந்த 2 நபர்கள் 09.02.2021 அன்று, 02.35 am மணியளவில் பண்ருட்டி அரசு மருத்துவமனை A.E வார்டில் கையால் தாக்கியதாக சொன்னார். அவரை நான் பரிசோதனை செய்ததில், கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

காயம்-1: இடதுபுறமாக கீழ் உதட்டின்கீழ் 1x2 cm அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது.

2. அவருக்கு நான் வெளிப்புற நோயாளியாக சிகிச்சை அளித்தேன். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று எனது கருத்துரை வழங்கி, காயச்சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு மேற்சொன்ன வெங்கடேசன் சம்மந்தமாக பதிவு செய்த விபத்து பதிவேடு ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் காயச்சான்று மேற்சொன்ன வெங்கடேசன் சம்மந்தமாக நான் அளித்த காயச்சான்றாகும் ஆகும். (**மேற்படி விபத்து பதிவேட்டின் கூடிய காயச்சான்று அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்சொன்ன நபர், மேற்சொன்ன விதத்தில் மேற்படி கையால் தாக்கப்பட்டிருந்தால், மேற்படி காயம்பட்ட நபருக்கு மேற்சொன்ன காயம் ஏற்பட

வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-4 காயச்சான்றிதழானது என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். அ.சா-1 என்னிடம் சிகிச்சைக்காக வந்தபோது, எத்தனை நபர்கள், என்னென்ன ஆயுதங்களால், அவரை தாக்கினார்கள் என்ற விவரத்தை என்னிடம் கூறி தான் சிகிச்சை பெற்றிருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து, நான் சிகிச்சை அளித்த இடத்திற்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்றால், நான் A.E வார்டு என்றுதான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன், ஆனால் அதில் எந்த இடம் என்று சரியாக குறிப்பிடவில்லை, எனவே, எனக்கு மேற்படி எவ்வளவு தூரம் என்று சரியாக தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திலிருந்து 30 நிமிடம் கழித்து தான் என்னிடம் சிகிச்சை எடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். போலிசார் விசாரணையில், நான் 03.50 மணிக்கு தான் சிகிச்சை கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், விபத்துபதிவேட்டில் குறிப்பிட்டுள்ள நேரத்தினை தான் நான் எழுதினேன், அதுதான் சரியான நேரம். ஒருநபர் குடிபோதையில் கால்இடறி கீழே விழுந்தால், மேற்படி காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அன்று அயல்பணியில் இருந்த வெங்கடேசன் என்பவர் எனக்கு நன்கு பழக்கம் என்றால், எனக்கு ஓரளவிற்கு தெரியும். மேற்படி வெங்கடேசன் என்பவர் எனக்கு நன்கு பழக்கம் என்பதால், அவருக்கு ஆதரவாக போலியாக ஒரு காயச்சான்றிதழை தயாரித்து கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பண்ருட்டி மருத்துவமனையில் ஓ.பி போலிஸ் ஸ்டேஷன் தனியாக உள்ளதா என்றால், சம்பவம் நடந்த சமயத்தில் இல்லை.

**அரசு தரப்பில் மறுவிசாரணை**

பண்ருட்டி அரசு மருத்துவமனையில் ஓ.பி போலிஸ் ஸ்டேஷன் என்று தனியாக கட்டிடம் இல்லை, இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பிலிருந்தே, பண்ருட்டி அரசு மருத்துவமனை A.E வார்டு உள்ளே ஒரு தனியறையாக போலிசாருக்கு ஒதுக்கப்பட்டு ஓ.பி போலிஸ் ஸ்டேஷனாக இயங்கி வருகிறது.

**எதிரி தரப்பில் மறுகுறுக்கு விசாரணை**

பண்ருட்டி அரசு மருத்துவமனையில் ஓ.பி போலிஸ் ஸ்டேஷன் என்று தனியாக கட்டிடம் இல்லை, இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பிலிருந்தே, பண்ருட்டி அரசு மருத்துவமனை A.E வார்டு உள்ளே ஒரு தனியறையாக போலிசாருக்கு ஒதுக்கப்பட்டு ஓ.பி போலிஸ் ஸ்டேஷனாக இயங்கி வருகிறது என்று நான் எனது அரசு தரப்பு மறு விசாரணையில் கூறியுள்ள நிலையில், அது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.